நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

dhinatamil.tn@gmail.com • மாற்றத்தின் ஆரம்பம் • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 08.01.2026 . மலர் 04 . இதழ் 008. வியாழக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 08.01.2026 . VOL 04 . ISSUE 008. THURSDAY . 4 PAGES . Rs. 5

## மக்கள் எப்போதும் நம் பக்கம்தான்... திரும்ப வருவோம்

# நல்லாட்சி தருவோம்!

## திண்டுக்கல் விழாவில் முதல்வர் ஸ்டாலின் சூளுரை!!

திண்டுக்கல், ஜன.08-

அதிமுக கூட்டணிக்கு வாக்களித்தால் பாஜக தான் தமிழகத்தை ஆளும் என நாங்கள் சொல்லி புரியவைக்க வேண்டியதில்லை, என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.1595 கோடியில் 111 முடிவுற்ற திட்டபணிகளை திறந்துவைத்து, 212 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: திண்டுக்கல் புரட்சியின் பெயர், எழுச்சியின் பெயர், வீரத்தின் பெயர். வரலாற்றை புரட்டிப்பார்த்தால் பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக போராடிய வேலுநாச்சியார், ஊமைத்துரையும் தங்கள் அடுத்த கட்ட போராட்டத்திற்கு திட்டமிட்ட ஊர் தான் வீரத்தின் விளைநிலமாக உள்ள திண்டுக்கல்.

ங்களை பொறுத்தவரையில் இது 'ஐபி' மாவட்டம். (அமைச்சர் ஐ.பெரியசாமி). திண்டுக்கல் பூட்டு எவ்வளவு உறுதியானதோ அதே அளவிற்கு உறுதியுடன் இந்த மாவட்டத்தை கட்டிக்காத்து வளர்ச்சியை நோக்கி அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார் அமைச்சர் ஐ.பெரியசாமி. அதேபோல் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணியும் சிறப்பாக செயல்பட்டுவரும் அமைச்சர்களில் ஒருவராக இருக்கிறார். அதனால் தான் தொடர் வெற்றிக்கு சொந்தக்காரராக இருக்கிறார்.

நகரங்களுக்கு இணையாக கிராமங்களின் உட்கட்டமைப்பு வளரவேண்டும். இந்த சமச்சீரான வளர்ச்சிதான் நம்முடைய திராவிட மாடல் இலக்கணம். திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலம் 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகிறது. இதில் 6915 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே திண்டுக்கல் மாவட்டத்தில் தான் அதிகப்படியான பட்டாக்களை வழங்கி வருகிறோம்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புக்களை வெளியிடுகிறேன்.

* திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் சாலை, தெருவிளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.14.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும். * திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாளசாக்கடை ரூ.8 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

*பழநி இடும்பன்குளம், சண்முகாநதி ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். *நத்தம் கலை அறிவியல் கல்லூரிக்கு ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்படும்.

*அதிகளவில் முருங்கை பயிரிடப்படும் ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள மார்க்கம்பட்டியில் உலக தரத்திலான முருங்கை ஏற்றுமதிக்கான பதப்படுத்தும் தொழிற்சாலை ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். *கொடைக்கானல் செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு 100 ஏக்கர் பரப்பில் அனைத்து உட்கட்டமைப்புகளையும் உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா முதலீட்டு பூங்கா வில்பட்டி ஊராட்சி பகுதியில் அமைக்கப்படும்.

*கண்ணுவலி கிழங்கு பயிர் உற்பத்தியில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது. இதற்கு நிலையான நியாயமான விலை கிடைக்க மத்திய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். *ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ரூ.18 கோடி செல்வில் புதிய கழிவுநீர் கால்வாய் அமைக்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டம் மட்டும் அல்ல ஒவ்வொரு மாவட்டத்திற்கு என்னென்ன தேவைகள் வேண்டும் என தேடி செய்கிறோம். 2026 புத்தாண்டு பிறந்தது முதல் புதிய திட்டங்களை அறிவித்துள்ளோம். அரசு ஊழியர்களின் உறுதியளிப்பு ஓய்வூதியத்திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டுள்ளேன். பொங்கலுக்கு ரூ.3000, அரிசி, சர்க்கரை, கரும்பு, வேட்டி, சேலைகள் வழங்கவும் ஆணையிட்டுள்ளேன்.

'உலகம் உங்கள் கையில்' என்ற திட்டத்தை துவங்கி வைத்து பத்து லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் 2019 ம் ஆண்டு பழனிசாமி முதல்வராக இருந்தபோது, மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டார்.

சிஏஜி அறிக்கையில், வாங்கப்பட்ட 55 ஆயிரம் லேப்டாப்களை வீணடித்துவிட்டார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதுகுறித்து பழனிசாமிக்கு சந்தேகம் இருந்தால் 2023 ம் ஆண்டு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் ஆதாரம் உள்ளது.

மக்கள் நலனுக்காக நாம் செய்யக்கூடிய திட்டங்களை குறைசொல்லக்கூடியவர்கள், இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி குளிர்காயலாம் என நினைக்கின்றனர். அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் அமித் ஷாவா அல்லது அவதூறு ஷாவா என சந்தேகம் உள்ளது. உண்மைக்கு புறம்பாக பேசிவிட்டுச் சென்றுள்ளார்.

தமிழகத்தில் இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகளுக்கு முடிவுகட்டும் வகையில் தமிழ்நாடு செயல்படுகிறது எனப் பேசியுள்ளார். இதற்கான கடுமையான கண்டனங்களை இந்த விழாவின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 4 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்துள்ளோம். இப்படிப்பட்ட சாதனையை பாஜக ஆளும் மாநிலங்களில் செய்துள்ளனரா, கண்டிப்பாக இல்லை.

அதுமட்டுமல்ல 997 கோயில்களுக்கு சொந்தமான 7 ஆயிரத்து 701 கோடி மதிப்பிலான 7655 ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். இந்து சமய அறநிலையத்துறை சார்பில் என்னென்ன செய்துள்ளோம் என ஒரு நாள் முழுக்க பேசலாம். அதனால் தான் பக்தர்கள் விரும்பக்கூடிய ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது. அனைத்து மதத்தினரின் நம்பிக்கையை பாதுகாக்கும் ஆட்சியாக உள்ளது.

இப்படிப்பட்ட தமிழ்நாட்டில் இந்துக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதாக உண்மையில்லாத குற்றச்சாட்டை உள்துறை அமைச்சர் சொல்வது அவரது பதவிக்கு கண்ணியமல்ல. உண்மையை சொல்லவேண்டும் என்றால் கலவரம் செய்யும் எண்ணம் தமிழ்நாட்டில் ஈடேறாது. ஸ்டாலின் இருக்கும் வரையில் அது நடக்காது. உள்துறை அமைச்சர் வெறுப்பு பிரச்சாரம் மட்டும் பண்ணிவிட்டுபோகவில்லை. ஒரு நல்ல காரியமும் பண்ணிவிட்டு போயிருக்கிறார்.

நாம் கேட்கவேண்டிய கேள்வியை அவரே கேட்டுவிட்டார். நம்முடைய வேலையை எளிதாக்கிவிட்டார். அதற்காக அவருக்கு நன்றி சொல்லவேண்டும். தமிழ்நாட்டில் மோடி ஆட்சி அமையவேண்டுமா என்று மக்களைப் பார்த்து கேட்டுள்ளார். இதையே தான் நாங்களும் சொல்கிறோம்.

2026 தேர்தல், தமிழ்நாட்டை நாங்கள் ஆள வேண்டுமா இல்லாவிட்டால் டெல்லியில் இருந்து நமக்கு சம்பந்தமில்லாதவர்கள் ஆள வேண்டுமா என்று முடிவு செய்ய உள்ள தேர்தல். இது தமிழக சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால். அதிமுக கூட்டணிக்கு வாக்களித்தால் பாஜக தான் தமிழகத்தை ஆளும் என நாங்கள் சொல்லி புரியவைக்க வேண்டியதில்லை. அமித் ஷா நேரடியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

'நீட்' தேர்வை விடாப்பபடியாக திணிக்கும், தேசிய கல்விக் கொள்கையை திணிக்கும், தொகுதி மறுவரை என தமிழ்நாட்டின் ஜனநாயக வலிமையை குறைக்கின்ற, வடமாநிலங்களில் தமிழர்களை கொச்சைப்படுத்துகிற பாஜக ஆட்சி அமைய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பாடுபடுகிறார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் பாஜகவின் 'மறைமுக' ஆட்சி நடந்தது! கடந்த 5 ஆண்டுகளாகத் தான் அதில் இருந்து மீண்டு தலைநிமிர ஆரம்பித்திருக்கிறோம். இப்போது நேரடியாகவே பாஜக ஆட்சி என்று சொல்லிகொண்டு வருகிறார்கள்!

11 ஆண்டுகளாக என்டிஏ ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு ஒரு துரும்பை கூட கிள்ளிபோடாத மத்திய அரசை தமிழ்நாட்டு மக்கள் நம்பத் தயாராக இல்லை.

2019, 2021, 2026 என கடந்த மூன்று தேர்தல்களிலும் மக்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாதது புரியவில்லையா. தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்வதை மாற்றிக் கொள்ளாதவரை, தமிழக மக்கள் தங்கள் முடிவை எப்படி மாற்றிக் கொள்வார்கள்.

மக்கள் எப்போதும் நமது அரசின் பக்கம் தான் உள்ளனர். திரும்பவும் நாங்கள் தான் வருவோம். நல்லாட்சி தருவோம். திராவிட மாடல் 2.0 ல் மீண்டும் பல சாதனைகளை படைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பெரியகருப்பன், எம்எல்ஏக்கள் இ.பெ.செந்தில் குமார், எஸ்.காந்திராஜன், எம்.பிக்கள் ஆர்.சச்சிதானந்தம், ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இறந்த நிலையில் தொடர்ந்து சங்குமால் கடற்கரையில் கரை ஒதுங்கிய கடல் ஆமை



இராமேஸ்வரம்.ஜன.08-

ராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டியுள்ள மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன.

இதில் பெருந்தலை ஆமை, சித்தாமை போன்ற ஐந்திற்கும் மேற்பட்ட ஆமை இனங்களும் வாழ்ந்து வருகின்றன. இந்த ஆமை இனங்களை பாதுகாக்க மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பகம் சார்பில் வனத்துறையினர் கடல் ஆமைகளின் முக்கியத்துவம் குறித்து மீனவர்கள் மற்றும் மீனவர் கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் கடற்கரை ஓரத்தில் ஆமைகள் இடும் முட்டைகளை பாதுகாப்பாக சேகரித்து ஆமை குஞ்சு பொரிப்பகத்தில் வளர்த்து ஆமைகளை வளர்க்கவும் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையில், ராமேஸ்வரம் அருகே ஓலைக்குடா கிராம கடற்கரை பகுதியில் கடந்த ஒரு வாரமாக உடல் அழுகிய நிலையில் 20-க்கும் மேற்பட்ட ஆமைகள் இறந்து கரை ஒதுங்கி உள்ளன. திடீரென ஆமைகள் இறந்து கரை ஒதுங்குவதால் மீனவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

மீனவர்கள் விசைப்படகுகளில் சிக்கி உயிரிழக்கின்றதா அல்லது வேறேதும் பாதிப்புகள் உள்ளதா என வனத்துறை ஆய்வு செய்ய வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முதல்வர் தொடங்கி வைக்கிறார்



மதுரை, ஜன.08-

வரும் 17-ம் தேதி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார் என அமைச்சர் பி மூர்த்தி உறுதியளித்துள்ளார்.

உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்தக்கால் நடும் விழா அலங்காநல்லூரில் நடைபெற்றது. இவ்விழாவினை வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழர்களுடைய பாரம்பரியமான உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நிச்சயமாக கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மிகச் சிறப்பாக அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெற இருக்கிறது. இந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை வரும் 17-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து தொடங்கி வைக்கிறார்.

பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியை வரும் 16-ம் தேதி துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைக்கிறார். இந்நிகழ்வில் அனைத்துக் கட்சியினுடைய முக்கியப் பிரமுகர்களும் இதிலே கலந்து கொள்ள இருக்கிறார்கள். பொதுமக்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

வழக்கமாக சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டு வந்தது தற்போது பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் விவசாயிகள் கோரிக்கைகளின் படி டிராக்டர் கொடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியினுடைய ஏற்பாடுகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தான் நடைபெறும். பார்வையாளர்களை ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை மாற்றுவது வழக்கமான ஒரு நிகழ்வு தான். டிஜிட்டல் ஸ்கிரீனில் ஸ்கோர் போர்டு வைக்கப்படும்.

போட்டிகள் அனைத்தும் எந்த பிரச்சினையும் ஏற்படாமல் நடக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் கூறினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், வெங்கடேசன் எம்எல்ஏ மற்றும் விழா கமிட்டியினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## மதுரை மாவட்ட எஸ்பி அலுவலகத்தில்

## சட்டம் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், தலைமையில் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம்



மதுரை, ஜனவரி. 08-

மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சட்டம் - ஒழுங்கு சம்பந்தமான கலந்தாய்வு கூட்டம், தமிழக காவல்துறையின் சட்டம் ஒழுங்கு கூடுதல் இயக்குநர் முனைவர். மகேஷ்வர் தயாள், தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்தாய்வு கூட்டத்தில் காவல்துறை துணைத் தலைவர் மதுரை சரகம் அபினவ் குமார்,மற்றும் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த். விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். கண்ணன். மற்றும் பயிற்சி உதவி காவல் கண்காணிப்பாளர் செல்வி. சத்திரிய கவின் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். அதன் பின்னர் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறக்கூடிய உலகப் புகழ்பெற்ற பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஆகிய இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

உடன் உதவி கண்காணிப்பாளர்கள் காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் காவலர்கள் பலர் உடனிருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய மூலம் தேர்வு செய்யப்பட்ட 09 இளநிலை உதவியாளர்களுக்கு வணிகவரித் துறை அமைச்சர் பி மூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.வானதி மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இ.சாலி தளபதி ஆகியோர் உடன் உள்ளனர்.

## நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுக்கான மனநலம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி



நாகர்கோவில், ஜனவரி. 8-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு உயர் கல்வித்துறை அறிவுறுத்தலின்படி, நேற்று பாலின உளவியல் குறித்த கண்காணிப்பு குழுவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கல்லூரி மாணவர்களுக்கான மனநலம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி கல்லூரி முதல்வர் முனைவர் மு. சுசீலாபாய் தலைமையில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பயிற்சியில் புஷ்பா மற்றும் ராணி ஆகியோர் மனநலம் சார்ந்த சிறப்புப் பயிற்சியை வழங்கினர். ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் லிண்டா செல்லா வரவேற்புரை வழங்கினார். இயற்பியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் கார்மல் விஜிலாபாய் நன்றியுரை ஆற்றினார், முனைவர் சுஜிதா குமாரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார், குழு உறுப்பினர்கள் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இந்த பயிற்சியில் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# தென்காசி பாட்டாக்குறிச்சி பிரம்மா கோவிலில் ஏப்ரல் 09,10,11,12 தேதிகளில் கும்பாபிஷேகம்

தென்காசி, ஜன.8–
தென்காசி மாவட்டம் பாட்டா குறிச்சி கிராமம் கீழப்பாட்டா குறிச்சியில் உள்ள பிரம்மா கோவிலில் வரும் ஏப்ரல் 09 முதல் 12 வரை கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இந்த விழா வில் கலந்து கொள்ள
இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி.ஆகியோருக்கு
அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
தென்காசி மாவட்டம் பாட்டா க்குறிச்சி கிராமம் கீழப்பாட்டா க்குறிச்சியில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் ப்ரம்மலோகம் கோவில் உள்ளது இத்திருக் கோயில் சத்யம்வதா தர்மம் சரா, அதிதிதேவோபவ போன்ற நமது வேதகால சனாதனக் கொள்கைகளின் அடிப்ப டையில் இந்தக் கோயில் கட்ட ப்பட்டுள்ளது
பிரம்மலோகத்தில் கதவுகள் இல்லை, துவாரபாலகர்கள் இல்லை, கதவுகளைத் திறப் பது அல்லது மூடுவது இல்லை உண்டியல்கள் இல்லை, ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் எந்த வகையான தீண்டாமையும் இல்லை, பணம் அல்லது மதி ப்புமிக்க நன்கொடைகள் பிர ம்மலோகத்தில் ஏற்றுக் கொள் ளப்படாது.
பிரம்மலோகத்தில் பிரம்மச் செடிகள் மற்றும் மரங்கள், பிர ம்ம நவகிரகங்கள், பிரம்ம நாக ங்கள், பிரம்ம கணபதி, பிரம்ம வேல்முருகன், பிரம்ம சபரிஜ யப்பன், பிரம்ம ஆஞ்சநேயன், பிரம்ம மஹாவிஷ்ணு பிரம்ம மஹாசிவன், பிரம்ம மஹாசரஸ் வதி பிரம்ம மஹாலட்சுமி, பிரம்ம மஹா சக்தி, பரபிம்மமான பஞ்ச முகப்ரம்மா என தெய்வங்களை பூஜிக்கிறோம்
ப்ரம்மா திருக்கோவில் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெ ற்று 9 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் தற்போது 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி துவக்கபட்டு 12ம் தேதி வரை கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. ஏப்ரல் 9 ஆம் தேதி காலை ஆலயத்தில் உள்ள 15 கும்பங்களுக்கும் தானியங்கள் நிரப்பும் நிகழ்ச்சி நடைபெறும்.
பிரம்மலோகத்தின் 9 வது வரு ஷாபிஷேகத்தின் முக்கியத்து வத்தைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் ஜனாதிபதி திரௌபதி முர்மு
மற்றும் இந்திய பிரதமர் நரேந் திர மோடி இருவரையும் விழா நடக்கும் நான்கு நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் ப்ரம்மா திருக்கோவில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம். அத ற்கான பணிகள் ஏற்கெனவே டெல்லியில் தொடங்கப்பட்டு ள்ளது.
ஏப்ரல் 9,10,11ஆம் தேதி மற் றும் 12 ஆம் தேதிகளில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரையிலும் தொடர்ந்து 4 நாட் கள் அன்னதானம் நடைபெறும். எனவே அனைத்து பக்தர்களும் 2026 ஏப்ரல் 9 முதல் 12 வரை நடைபெறும் பிரம்ம லோக பிரம்மோற்சவத்தில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல பஞ்ச முக பிரம்மாவின் ஆசிகளைப் பெற அன்புடன் அழைக்கி றோம்.
இவ்வாறு பாட்டாக்குறிச்சி பிர ம்மா கோவிலின் நிர்வாகி வழ க்கறிஞர் ப்ரம்ம ஸ்ரீ கே.கே.சரத் சந்திரபோஸ் மற்றும் பிரம்மா கோவிலின் ஒருங்கிணைப் பாளர் கொட்டாகுளம் இசக்கிப் பாண்டியன் ஆகியோர் அழை ப்பு விடுத்துள்ளனர்.



# மதுரை அல்-அமீன் மேல்நிலைப்பள்ளி உயர்கல்வி மாணவர்களுக்கு அரசு பொதுத் தேர்வை எவ்வாறு எதிர்கொள்வது என்று தன்னம்பிக்கை விழிப்புணர்வு



மதுரை ஜனவரி.08-
மதுரை கோ.புதூர் அல்-அமீன் மேல் நிலைப்பள்ளியில் 12-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வை எழுதவிருக்கும் மாணவ ர்களுக்கு தன்னம்பிக்கை, திறன் மேன்பாடு மற்றும் உயர்கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளி தலைமையாசிரியர் ஷேக்நபி தலை மையில் உதவித்
தலைமையாசிரியர்கள் ஜாகிர் உசேன் மற்றும் அல்ஹாஜ் முகமது ஆகியோர் முன் னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திருக்கோஷ்டியூர் மணிகண்டன் கலந்து கொண்டு பொதுத் தேர்வு எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு நேர மேலாண்மை, அறிவுத் திறன் மேம் பாடு, கல்வி சார்ந்த வளர்ச்சி குறித்தும், மாணவர்களுக்கு மத்திய, மாநில அரசு களின் உயர்கல்வி நிறுவனங்களில் போட் டித்
தேர்வுகளில் எவ்வாறு சேர்வது குறித்த சந்தேகங்களை விளக்கிக் கூறி சிறப்புரை யாற்றினார். இந்த விழாவில்
தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக் குழு மதுரை மாநகரத் துணைத் தலைவர் முகமது அலி, இந்திய மாணவர் சங்கத் தலைவர் டீலன் ஜெஸ்டின், செயலாளர் டேவிட் ராஜதுரை கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை முதுகலை கணித ஆசிரியர் தமிழ்குமரன். மற்றும் ஆசிரியர் கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கோவை மாவட்ட தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் ஆலோசனை கூட்டம், பாராட்டு விழா!

கோவை ஜன.08
தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை கோவை மாவட்ட சார்பில் ஆலோசனை கூட் டம் மற்றும் ஜல்லிக்கட்டு பேரவை மாநில தலைவர் ஜல்லிக்கட்டு காவலன் ராஷ் ட்ரியா ரத்னா டாக்டர் பி.ரா ஜசேகரன் அவர்களுக்கு பாராட்டு விழா கோவை ராம நாதபுரம் ஒலம்பஸ் 80 அடி சாலை பகுதியில் உள்ள சாண்டோ எம் எம் ஏ சின்ன ப்பா தேவர் திருமண மண்ட பத்தில் நடைபெற்றது.
நிகழ்ச்சிக்கு கோவை ஆர்.என் ரவி வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை கோவை மாவட்ட தலை வர் ஆர்.எஸ் திருமுகம் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் ராம நாராயணன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப் பாளர்களாக சுந்தர தேவர், கோவை செல்வம், பாவை கண்ணதாசன், ஜெயபிர காஷ், காளி முத்துராஜன் ஆகியோர் கலந்து கொண் டனர். ஆலோசனை கூட் டத்தை தொடர்ந்து தமிழ் நாடு ஜல்லிக்கட்டு பேரவை மாநில தலைவர் ஜல்லிக் கட்டு காவலன் ராஷ்ட்ரியா ரத்னா டாக்டர் பி.ராஜசே கரன் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.
இறுதியில், சிண்டிகேட் கரன் நன்றி உரையாற் றினார். நிகழ்ச்சிக்கான ஏற் பாட்டினை கோவை மாவட்ட ஜல்லிக்கட்டு பேரவை நிர்வா கிகள் செய்திருந்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில், உயர்கல்வித் துறை சார்பாக, கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்கா க,"உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ், 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கத்தில், "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட் டத்தின் கீழ், மருத்துவம், கலை மற்றும் அறிவியல், தொழில் பயிற்சியில் இறுதியாண்டு பயிலும் 681 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் .ஒய்.பிரகாஷ் ஓசூர் .தே.மதியழகன் பர்கூர் ஆகியோர் வழங்கினார் கள். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, கிருஷ்ணகிரி அரசு மரு த்துவக் கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா, கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.சௌ.கீதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# தஞ்சாவூர் கரந்தை தமிழ்ச் சங்க செயலருக்கு சேவை செம்மல் விருது



தஞ்சாவூர் ஜனவரி.8-
தஞ்சாவூர் நகைச்சுவை மாமன்றம் சார்பில் விருது வழங்கும் விழா தஞ்சாவூரில் நடைபெற்றது விழாவில் கலைமாமணி டாக்டர் நரேந்திரன் தலைமை தாங் கினார் .மாமன்ற செயலாளர் ஜெயக்குமார் அனைவ ரையும் வரவேற்றார்
நிகழ்வில் கரந்தை தமிழ் சங்க செயலாளர் இரா. சுந்தரவதனுக்கு கல்வி சேவை மற்றும் அரசு நூலகம் அமைவதற்க்கு ரூபாய் 1 கோடி பெறுமான இடத்தை தானம் வழங்கியதை பாராட்டியும் "சேவை செம்மல் "விருதை டாக்டர் நரேந்திரன் வழங்கினார். மற்றும் தன்னார்வ சேவை பணிகளை பாராட்டி அழகம்மாள் நகர் கிளை நூலகவாசகர் வட்டத் தலைவர் கோ.தன பாலகிருஷ்ணன் , அம்மாபேட்டை த.முருகேசன் ஆகி யோருக்கு 'சேவை திலகம் 'விருதும் வழங்கப்பட்டது.
நிகழ்ச்சியில்' மகிழ்வோம், மகிழ்விப்போம் 'என்ற தலைப்பில் ஆடுதுறை .அழகு .பன்னீர்செல்வம் சிற ப்பான நகைச்சுவை உரை யாற்றினார். முன்னதாக இந்துமணியின் இசை விருந்தும், நடைபெற்றது.

# திருக்குறள் திருப்பணி 22ஆம் நாள் வகுப்பு!



கிருஷ்ணகிரி , ஜன.08-
தமிழ்நாடு தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் கிருஷ் ணகிரி கம்பன் கழகம்* மற்றும் அகம் நடன ஸ்டுடியோ இணைந்து நடத்தும் திருக்குறள் திருப்பணி 22ஆம் நாள் வகுப்பு கிருஷ்ணகிரி டான் பாஸ்கோ மெட்ரிக் மேல்நி லைப்பள்ளி கலையரங்கத்தில் நடைப்பெற்றது
அது சமயம் அகம் நடன பள்ளி நிறுவனர் சக்தி நிறு வனர். சிவபாலா நாட்டியப்பள்ளி நிறுவனர் சிவ பாலா ம்பிகேஷ்வரி மற்றும் சபரி நடனப்பள்ளி நிறுவனர் சபரி நாதன் மற்றும் வைசு நடனப்பள்ளி காவேரிப்பட்டிணம் நிறுவனர் லஷ்மனன் மற்றும் அச்சிர்வர்ஷ் அகாடமி நிறுவனர் திருப்பத்தூர் அரவிந்தன் அவர்கள் கலந்து கொண்டனர் திருக்குறள் பயிற்சி ஆசிரியராக மதிப்புறு முனைவர் மருதம் க. அருள்
மற்றும் மதிப்புறு முனைவர் ஜெ. பாலாஜி அவர்கள் வகுப்பினர் நடத்தினார்கள் மற்றும் கண்காணிப்பாள ராக கம்பன் கழக தலைவர் மதிப்புறு முனைவர் இ.ரவி ந்தர் மற்றும் கம்பன் கழக பொருளாளர் கல்வியாளர் மு. ஸ்ரீரங்கன் .கலந்துகொண்டு சிறப்பித்தனர் மற்றும் 200 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு திருக்குறள் ஒப்புவித்து வள்ளுவரின் வாய்மையை பெரு மிதத்தோடு கற்று மகிழ்ந்தனர் பரிசும் பாராட்டும் பெற்று செல்வி தனுஸ்ரீ நன்றி நவில சிறு தீனி வழங்கி இனிதே பயிலரங்கம் நிறைவுற்றது.

# குறும்பேற்றி பகவதி அம்மன் கோயிலில் குமரி மேற்கு மாவட்ட பாஜக சார்பில் நம்ம ஊரு மோடி பொங்கல் விழா!



மார்த்தாண்டம், ஜன.8–
குமரி மேற்கு மாவட்ட பாஜக சார்பில் உங்கள் ஊர் மோடி பொங்கல் விழா மார்த்தாண்டம், குறும்பேற்றி பகவதி அம்மன் கோயிலில் நடைபெற்றது. மேற்கு மாவட்ட பாஜக தலைவர் ஆர் டி சுரேஷ் தலைமை வகித்தார்.
இந்த நிகழ்ச்சியில் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எம் ஆர் காந்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பொது செயலாளர்கள் நந்தினி , சுடர் சிங், மாவட்ட செயலாளர் ரெத்தினமணி,ராஜேஷ் ,ரஜீலா,கிரிஜா, ஸ்ரீகுமார் மாவட்ட துணை தலைவர்கள் மில்டா, இளைஞர் அணி மாவட்ட தலை வர் சுஜின் குமார், மகளிர் மாவட்ட தலைவர் கலா , விவசாய அணி மாவட்ட தலைவர் மனோகர குமார் தன்னார்வலர்கள் தொண்டர்கள் பிரிவு அமைப்பாளர் சேம்குமார் ராதாதங்கராஜ், மனோகரன் ,கிள்ளியூர் கிழக்கு ஒன்றிய தலைவர் சுந்தரபால், குழித்துறை நகர தலைவர் சுமன், பத்மநாபபுரம் நகர தலை வர் கீதா ,முஞ்சிறை கிழக்கு ஒன்றிய தலைவர் ஸ்ரீகண்டன் உட்பட கிளை ஒன்றியம் மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.
நூற்றுக்கும் மேற்பட்ட பானைகளில் சர்க்கரை , வெண்பொ ங்கல் போடப்பட்டது. மேலும் வினாடி வினா போட்டி நடத்தப் பட்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிமன்ற உத்தரவு திருப்புவனத்தில் இனிப்பு வழங்கி கொண்டாடிய பாஜகவினர்



திருப்புவனம், ஜன.08-
சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்த ரவை அடுத்து திருப்புவனத்தில் பாரதிய ஜனதா கட்சியினர் ஒன்றிய தலைவர்கள் ராஜ கதிரவன், செல்லராஜா ஆகியோர் தலைமையில் மணிமந்திர விநாயகர் கோவி லில் சிறப்பு பூஜை செய்து பொதுமக்க ளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் பாட்டம் நாகராஜன், பட்டியல் அணி மாவ ட்ட தலைவர் கண்மணி ராஜா, கலைக் கலாச்சாரப் பிரிவு மாவட்ட தலைவர் ஆதி த்யா, வர்த்தக பிரிவு மாவட்ட செயலாளர் டயானா சிவகுமார், ஆன்மீக பிரிவு மாவட்ட இணை அமைப்பாளர் பிரபு சுப்ரமணி, பொதுச் செயலாளர்கள் முத்திருளு, பிரித் திவிராஜன் மற்றும் பாஜக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!


# சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 604 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி



தென்காசி, ஜன.08-
தென்காசி மாவட்டம் சுரண்டை காம ராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூ ரியில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகு மார் , தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் கலந்து கொண்டு முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாண வியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கி னார்கள்.
தென்காசி மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த 3503 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி வழங்கப்படவுள்ளது. அத னடிப்படையில் முதற்கட்டமாக இன்றைய தினம் 604 கல்லூரி மாணவ, மாணவியர்க ளுக்கு மடிக்கணிணி வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கி ஷோர் தெரிவித்தார்.
இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலு வலர் ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வள ர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண் டபாணி, மாவட்ட சமூக நல அலுவலர் மதிவதனா, சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.கணேசன், சுரண்டை நகர்மன்ற தலைவர் வள்ளிமுருகன் மற்றும் அரசு அலு வலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
உலகம் உங்கள் கையில் திட்டத்தின் வாயிலாக மடிக்கணினி பெற்ற ஹரிதரன் மாணவன் தெரிவிக்கையில்
எங்கள் குடும்பம் விவசாய குடும்பம் என் தகப்பனார் பெயர் அன்னராஜ் ஒரு விவசாயி அதிலிருந்து வரும் வருமான த்தை வைத்து தான் எங்கள் குடும்பம் நடை பெற்று வருகிறது அந்த சூழ்நிலையிலும் என்னை காமராஜர் அரசு கலைக் கல்லூ ரியில் இளங்கலை மைக்ரோ பயாலஜி சேர் த்து தற்பொழுது மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறேன். எனக்கு இந்த மடிக்கணினி கிடைத்துள்ளதால் படிப்பதற்கு உதவிகர மாக இருக்கும். மேலும், வேலை வாய்ப்பு உள்ள செய்திகளை சேகரிப்பதற்கு மிக வும் பயனுள்ளதாக இருக்கும். எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வரப்பிரசாதம். மடிக்கணினி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கும், துணை முதலமைச்சருக்கும், மாவட்ட நிர்வாகத்தி ற்கும் எனது மனம் நிறைந்து நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

# வேளச்சேரி பிரசாந்த் மருத்துவமனையில் 76 வயது மூதாட்டிக்கு பெருநாடி வீக்கத்திற்கு' அறுவைசிகிச்சை

சென்னை, ஜன.08-
சென்னை வேளச்சேரியில் உள்ள பிர சாந்த் மருத்துவமனையின் மருத்துவர்கள் குழு, 76 வயது பெண்மணி ஒருவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த 'ஏறுமுக பெருநாடி வீக்க' (Ascending Aortic Aneurysm) பாதிப்பிற்கு மிகச் சிக்க லான அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து குணமளித்திருக்கிறது.
இந்நோயாளிக்கு செய்யப்பட்ட பரிசோ தனையில், இதயத்திலிருந்து உடலுக்கு இரத்தம் கொண்டு செல்லும் முக்கியக் குழாயான பெருநாடி மற்றும் அதன் வளை வுப் பகுதி (Proximal arch) ஆகியவை மிகவும் விரிவடைந்திருப்பது கண்டறியப் பட்டது. பெருநாடியின் பலவீனமான பகுதி இவ்வாறு விரிவடைவதே 'அஸெண்டிங் அயோர்டிக் அனீரிசம்' என மருத்துவ துறை யில் அழைக்கப்படுகிறது.
ஏறக்குறைய 10 மணி நேரம் நடைபெற்ற இந்த அறுவை சிகிச்சையில், பாதிக்கப்பட்ட பெருநாடிப் பகுதி மற்றும் வளைவுப் பகுதி அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக 30 மிமீ 'இன்டர்கார்ட் கிராஃப்ட்' (Intergard graft) எனும் செயற்கைக் குழாய் பொருத்தப்ப ட்டது. நோயாளியின் இரத்த நாளங்களில் சுண்ணாம்புச் சத்து அதிகம் படிந்திருந்த தாலும், திசுக்கள் வலுவிழந்திருந்ததாலும், இரத்தப்போக்கு மற்றும் நரம்பியல் சிக்கல் கள் ஏற்படும் அபாயம் அதிகமாக இருந்தது.
நோயாளிக்கு பக்கவாதம் ஏற்படும் அபா யத்தைக் குறைக்க, அறுவை சிகிச்சையின் போது மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத் தைக் கண்காணிக்க என்.ஆர் எஸ் ('NIRS') எனும் நவீன தொழில்நுட்பத்தை மருத்துவர் கள் பயன்படுத்தினர். வெற்றிகரமான இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளி எவ்வித சிக்கலுமின்றி குணமடைந்ததால், ஐந்தாவது நாளில் மருத்துவமனையிலி ருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
இது குறித்துப் பேசிய பிரசாந்த் மருத் துவமனையின் இருதயம் மற்றும் மார்பு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கௌ ஷிக் கண்ணன் கூறியதாவது:- "பெருநாடி வீக்கம் என்பது சுமார் 10,000 பேரில் 6 முதல் 8 பேரை பாதிக்கக்கூடியது. இப்பா திப்பின் அறிகுறிகள் தெளிவாக குறிப்பிட் டுச் சொல்லும்படி இருக்காது என்பதால், சாதாரண நெஞ்சு வலி என்று கருதி, பலர் அலட்சியமாக இருந்து விடுகின்றனர்.
உயர் இரத்த அழுத்தம் உள்ள முதி யவர்களுக்கு பெருநாடி வீக்க பாதிப்பு காலதாமதமாக கண்டறியப்படுமானால், உயிருக்கே ஆபத்தானதாக அது மாற க்கூடும். முன்கூட்டியே கண்டறிதலும், துல்லியமாகத் திட்டமிடப்பட்ட அறுவை சிகி ச்சையும் மட்டுமே பெருநாடி வீக்க வெடிப்பு அல்லது பக்கவாதம் போன்ற தீவிர அபா யத்தை தடுக்க உதவும். பல்வேறு துறை களின் நிபுணர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பும், திறன்மிக்க செயலாக்கமும் இந்த அறுவை சிகிச்சை பாதுகாப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெறுவதற்கு உத வியது." என்றார்.



சென்னையில் காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் " உலகம் உங்கள் கையில் " 10 லட் சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து .தருமபுரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ .மணி, சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரி மாணவ, மாண விகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர்ராஜ், நகர மன்ற உறுப் பினர் லட்சுமி நாட்டான் மாது, ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சரவணன், தருமபுரி அரசு கலைக்கல்லூரியின் முதல்வர் கண்ணன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சூறைக்காற்றில் வீடுகள் சேதம் : கண்டுகொள்ளாத அதிகாரிகள்



நாகர்கோவில், ஜன.8-
கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சூறைக்காற்று வீசி வருகிறது. மாவட்டத்தின் பல பகுதிகளில் சூறைக் காற்றிற்கு ஈடு கொடுக்க முடியாமல் தென்னை வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. இந்நிலையில் தெங்கம்புதூர் அருகே உள்ள பால்குளம் பகுதியில் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் பழமையான மரங்கள் அப்பகுதியில் உள்ள பாக்கியராஜ் புஷ்பவல்லி என்ற வயதான தம்பதியரின் வீட்டின் மேற்கூறையில் விழுந்து மேற்கூரை சேதமடைந்தது. இதனால் வீட்டில் உள்ள மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டது. இரவு நேரத்தில் பக்கத்து அறையில். வயதான தம்பதியர் தூங்கியதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது .

பின்பு தம்பதியினர் கூறுகையில், தினந்தோறும் கூலி வேலைக்கு சென்றால்தான் எங்களுக்கு சாப்பாடு என்றும் எங்களுக்கு வேறு வருமானம் எதுவும் கிடையாது நாங்கள் 50 வருடமாக இந்த கூரைவிட்டியில் தான் குடியிருந்து வருகிறோம். கூரையின் மேல் மரம் விழுந்து நான்கு நாட்கள் ஆகியும் எந்த அதிகாரியும் வந்து பாதிக்கப்பட்ட வீட்டினை பார்வையிடவில்லை நாங்கள் பக்கத்து வீட்டில் தங்கி உண வருந்தி வருகிறோம் என குற்றம் சாட்டினர் மேலும் மேற்கூரையில் விழுந்த மரங்களை அகற்றி வீட்டின் மேற்கூரையை மாற்றி தர வேண்டுமென மாவட்ட நிர்வாகத்திற்கு அந்த வயதான தம்பதியினர் கோரிக்கை விடுத்தனர்.

# திருப்பரங்குன்றத்தில் தீபம் எம் ஆர் காந்தி எம்எல்ஏ வரவேற்பு



மார்த்தாண்டம், ஜன.8-
கன்னியாகுமரி மேற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் உங்கள் ஊர் மோடி பொங்கல் விழா மார்த்தாண்டம் குறும்பேற்றி பகவதி கோவில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட எம் ஆர் காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:- விவசாயிகளுக்கு காப்பீடு திட்டம் மற்றும் விவசாயம் மற்றும் விவசாய்களை பாதுகாக்க ஆண்டிற்கு மூன்று தவணையாக இரண்டாயிரம் வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக மோடி அரசு ஆறாயிரம் வழங்கி விவசாய்களை பாதுகாத்து வருகிறது. மத்திய மோடி அரசு அரிசி உற்பத்தியில் சீனாவை பின்னுக்கு தள்ளி இந்தியா முதல் இடம் பிடித்து உள்ளது. ஆகவே நம்ம ஊர் மோடி பொங்கல் என்று கொண்டாடப்பட்டு வருகிறது.

திருப்பரங்குன்றம் தீப தூணில் தீபம் ஏற்றலாம் என்ற தீர்ப்பின் மூலம் நீதி வென்று உள்ளது. தீர்ப்பை வரவேற்கிறோம். நீதிமன்றம் சுட்ட பதில் அடி கொடுத்து உள்ளது உடனே நீதிமன்ற தீர்ப்பை மதித்து அந்த தீர்ப்பை செயல்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயில் தேரோட்டம் நிகழ்வில் பக்தர்களை அவதூறு பேசிய இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி வரும் 9 தேதி பத்மநாபபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன் தர்ணா போராட்டம் நடத்த போவதாக தெரிவித்தார்.




# பென்னாகரம் அரசு கல்லூரியில் திருக்குறள் கருத்தரங்கம்



தருமபுரி, ஜனவரி. 08-
தருமபுரி மாவட்டம் பென்னாகரம் மாமரத்துப்பட்டியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மற்றும் திருக்குறள் கருத்தரங்கம் முதல்வர் சங்கர் தலைமையில் நடைபெற்றது. உதவி பேராசிரியர் கதிர்வேல் வரவேற்புரையாற்றினார் . அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் திருக்குறள் தொடர்பான கலை இலக்கிய அறிவு சார் போட்டிகள் மற்றும் கருத்தரங்கங்கள் ஒரு வார விழாவாக கொண்டாடப்பட்டது. இதில் குரல் வினாடி வினா, விவாதப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்தக் கருத்தரங்கில் காளியப்பன் ,கண்ணன், முத்துக்குமாரசுவாமி கதிர்வேல், திருநாவுக்கரசு, சத்தியமூர்த்தி , இளவரசன் ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்கு திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் பற்றி கருத்துக்களை வழங்கினார்கள். உதவிப் பேராசிரியர் சுகனேஸ்வரன் நன்றி கூறினார். இந்த கருத்தரங்கில் கல்லூரியின் பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சங்குமால் கடற்கரையில் கடல் அரிப்பால் கடலுக்குள் சாய்ந்து விழும் மரங்கள் !



இராமேஸ்வரம்.ஜன.08-
ராமேஸ்வரம் அருகே சங்குமால் கடற்கரையில் கடல் அரிப்பு கடலுக்குள் மரங்கள் சாய்ந்து விழும் சூழல்.அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்.

மேலும் வங்க கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை வழுவடைந்து வரும் நிலையில் ராமேஸ்வரத்தில் கடல் சீற்றம் காரணமாக மணல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரையோரம் இருந்த தென்னை மரங்கள் சேதமடைந்து வருகிறது.

வங்க கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை வழுவடைந்து வரும் நிலையில் கடலோர மாவட்டத்தில் மிதமான மழையும் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், ராமேஸ்வரம்,பாம்பன்,மண்டபம் உள்ளிட்ட பகுதியில் காற்றின் வேகம் வழக்கத்தை விட அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளது. ராமேஸ்வரம் சங்குமால் கடற்கரையில் கடல் சீற்றம் காரணமாக கரையோர பகுதியில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியில் கரையோரம் உள்ள தென்னை உள்ளிட்ட பல மரங்கள் சேதமடைந்து வருகிறது.இந்த நிலையில் சங்குமால் கடற்கரை பகுதியில் வழக்கத்துக்கு மாறாக கடல் சீற்றத்துடன் காணப்படுவது மட்டுமல்லாது கடல் அரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இதனால் கடற்கரை ஓரத்தில் வளர்ந்து நிற்கின்ற தென்னை உள்ளிட்ட பல்வேறு மரங்கள் கடல் அரிப்பு ஏற்பட்டு ஒவ்வொரு நாளும் மரங்கள் சாய்ந்து கடலுக்குள் விழும் சூழல் உருவாகி வருவதால் அப்பகுதிக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் மீது மரங்கள் விழுந்து உயிர் பலிகள் ஏற்படும் சூழல் உருவாகி வருவது மட்டுமல்லாது படகுகள் சேதம் அடையும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர்

இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து கடல் அரிப்பை தடுக்க வேண்டுமென அப்பகுதியில் உள்ள மீனவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் 7 1/2 லட்சம் ரேஷன் கார்டுகளுக்கு பொங்கல் தொகுப்பு ரூ 3 ஆயிரம் : மாவட்ட ஆட்சியர் கந்தசாமி ஆய்வு !



ஈரோடு ஜன.08-
தமிழ்நாடு முதலமைச்சர் பொங்கல் பண்டிகையை யொட்டி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு. மற்றும் ரூ.3,000 ரொக்கமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இதன்படி ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 1,270 கடைகளில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் 746,528 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற உள்ளார்கள். இந்த பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கும் நிகழ்ச்சியை முதல் அமைச்சர் மு க ஸ்டாலின் சென்னையில் வருகிற 8 ந் தேதி தொடங்கி வைக்கிறார் .

இதன் பிறகு தமிழ் நாடு முழுவதும் அனைத்து ரேஷன் கடைகளிலும் பொங்கல் பரிசு வழங்கப்படுகிறது. அப்போது ரேஷன் கடைகளில் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொது மக்களுக்கு டோக்கன் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பொங்கல் பண்டிகைக்கு கரும்பு வழங்கப்படுவதையொட்டி விவசாயிகளிடமிருந்து கரும்பு கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது . இதையொட்டி ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம் கோபி ,சுகூனூர் பகுதியில் கரும்பு பயிரிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு கரும்பின் சுவை, உயரம், தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து பொலவக்காளிபாளையம் மற்றும் வெள்ளாளபாளையம் பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக்கடைகள் விற்பனையாளர்கள் மூலம் வீடு வீடாக பொங்கல் பரிசு தொகுப்பு பெற டோக்கன்கள் வழங்கப்படுவதை பார்வையிட்டு தேதி, நேரம், இருப்பதை ஆய்வு செய்தார்.

மேலும் கோபி, லக்கம்பட்டி, கரட்டடிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக்கடைகளில் பொங்கலுக்கு கொள்முதல் செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ள கரும்பு, பச்சரிசி, சர்க்கரை, ஆகியவற்றின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது கூட்டுறவு சங்ககளின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித்திட்டப் பணிகள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் மு.பிரதாப் ஆய்வு !



திருவள்ளூர், ஜன.08–
திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் நடைப்பெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சி தலைவர் மு.பிரதாப், செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டு, பணிகள் தொடர்பாக விவரித்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம், அம்மம்பாக்கம் ஊராட்சி, சீத்தஞ்சேரி கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.7.29 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகளை பராமரித்து வளர்க்கும் பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு.வை.ஜெயகுமார் செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டு, பணிகள் தொடர்பாக விவரித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், செய்தியாளர்களிடம் கூறியதாவது,

திருவள்ளுர் மாவட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பாக பல்வேறு திட்டங்கள் அனைத்து ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்று மாவட்ட பத்திரிகையாளர்களை அழைத்துக் கொண்டு ஊரக வளர்ச்சி துறை சார்ந்த சில பணிகளை நாம் கள ஆய்வு மேற்கொண்டோம். பூண்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அங்கன்வாடி மையம், கிராம சேவை மைய கட்டிடம், பஞ்சாயத்து அலுவலகம், நர்சரி. அம்மம்பாக்கம் நர்சரி உள்ளிட்ட பல்வேறு பசுமை தொடர்பான பணிகள், கட்டிட பணிகள், பல்வேறு திட்ட பணிகளை மாவட்ட பத்திரிகையாளர்களோடு இணைந்து நாம் களாய்வு செய்தோம். அதன்படி இந்த வருடம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக பல்வேறு திட்டப்பணிகள் என்னென்ன செய்கிறோம் அதற்கான மதிப்பீடுகள் என்ன என்னென்ன பணிகள் எந்தெந்த மக்களுக்காக செய்யப்படுகிறது உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் பத்திரிக்கையாளர்களின் வாயிலாக மாவட்ட மக்களுக்கு தெரிவிப்பதற்கான முன்னெடுப்பாக இந்த திட்டத்தை இந்த மாதம் முதல் செயல்படுத்த இருக்கிறோம். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பாக திட்டங்கள் ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான திட்டங்கள் திருவள்ளுர் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறோம். முக்கியமாக பள்ளி கட்டிடங்கள் ஊராட்சி ஒன்றிய மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இந்த வருடம் மட்டும் பள்ளிகளுக்கு 379 கட்டிடங்கள் ரூ.113 கோடி கடந்த மூன்று ஆண்டுகள் செலவிட்டுள்ளோம். குழந்தை நேயப் பள்ளிகள் என்னும் புது திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு எட்டும் இடத்தில் கரும்பலகை வைப்பது, Smart board,மற்றும் (BALA) Building As a Learning Aid மூலம் கட்டடத்தை படிப்பு மையமாக மாற்றுவதற்கு சுவர் முழுவதும் வரைபடங்கள், குழந்தைகள் விரும்பக் கூடிய வகையில் கட்டங்களை அமைப்பது, ஏற்கனவே இருக்ககூடிய கட்டட்ங்களை புதுப்பித்துள்ளோம். 379 கட்டங்களை நான்கு வருடத்தில் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறோம். அங்கன்வாடி மையம் மிகவும் முக்கியமானதாகும். குழந்தைகள் பள்ளி செல்வதற்கு முன்பு அந்த குழந்தையை பள்ளிக்கு தயார்படுத்துவது அங்கன்வாடி மையம். 4 ஆண்டுகளில் 444 அங்கன்வாடி கட்டிடங்கள் ரூ.62 கோடி மதிப்பீட்டில் கட்டி உள்ளோம். 2024–2025 ஆம் ஆண்டில் மட்டும் 93 கட்டிடங்கள் பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேலும் 10 கட்டிடங்கள் கட்டப்பட்டு 100 கட்டிடங்கள் கட்டிப்பட்டு ஒரு வருடத்தில் 100–க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கொடுத்துள்ளோம் என்பது மிகப்பெரிய விஷயத்தை அங்கன்வாடி மையத்தில் செய்துள்ளோம்.

கிராமத்தில் பொது சுகாதாரத்திற்காக பொது சுகாதார கட்டடங்கள் 15–வது நிதி குழு திட்டத்தின் மூலமாக சுகாதார துறை நிதியின் மூலம் ஊரக வளர்ச்சி துறையும் பேரூராட்சிகள் அனைத்து நகராட்சிகளிலும் செயல்படுத்தி வருகிறோம். ஊரக வளர்ச்சி துறையில் 40 கட்டிடங்கள் 21 கோடியில் அமைத்துள்ளோம். கிராம சுகாதார அலுவலங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல், ஆய்வகம், பேரம்பாக்கத்தில், வெள்ளியூரில் கட்டிக்கொண்டு இருக்கிறோம். வட்டாரங்களிலேயே லேப் அமைத்து நான்கு ஐந்து பிஹெச்சிக்கு ஒரு வட்டார லேப் அமைத்து முடிவுகளை குறித்த நேரத்தில் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். திருவள்ளூர் மாவட்டத்தில் நெல் அதிகமாக பயிர் இடுவதால் 20 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்காக புதிய கட்டடங்களை கட்ட நிர்வாக அனுமதி கடந்த மாதம் கொடுத்துள்ளோம். கடந்த 5 ஆண்டுகளில் எந்த ஊராட்சியில் அதிகமாக நெல் கொள்முதல் உள்ளதோ அந்த ஊராட்சியில் அமைக்க உள்ளோம். இதன் மூலம் விவசாயிகளுக்கு பெரு பயன் அடைவார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் அறிவித்துள்ளார்கள். 6 சட்டமன்ற தொகுதிகளிலும் எதுவும் தொடங்கவில்லை. தற்போது 3 சட்டமன்ற தொகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். கடந்த மாதம் திருவேற்காட்டில் நடந்த பொது நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். கும்மிடிபூண்டி தொகுதியில் பூவலம்பேடு, பொன்னேரி தொகுதியில் மீஞ்சூர், பூவிருந்தமல்லி தொகுதியில் காக்களூர் ஆகிய 3 இடங்களிலும் சிறு விளையாட்டு அரங்கம் ஆரம்பித்து இன்னும் 6 மாதத்திற்குள் பணிகள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

பழைய பொது விநியோக கட்டிடங்கள் சேதமடைந்து உள்ளதால் கடந்த 4 ஆண்டுகளில் 161 பொது விநியோக கட்டிடங்கள் ரூ,20 கோடி மதிப்பீட்டில் கட்டி முடித்துள்ளோம். இந்த வருடம் 25 பொது விநியோக கட்டிடங்களை பழுது பார்க்க எடுத்துள்ளோம்.

கலைஞரின் கனவு இல்லம், முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டம் மூலம் பணிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பிரதம மந்திரி வீடுகள் வழங்கும் திட்டத்தின் மூலமும் பணிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த வருடம் பழங்குடியின மக்களுக்காக (PM-JANMAN) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலேயே அதிகமான வீடுகள் திருவள்ளூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. 2730 வீடுகள் எடுத்துள்ளோம் அதில் 300 வீடுகள் முடிந்துள்ளது. மற்ற வீடுகளும் பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம். இந்த வருடம் 2700 பழங்குடியினர்கள் புதிய வீடுகளுக்கு செல்ல இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து அரசு துறை அலுவலர்கள் பொங்கல் கொண்டாட உள்ளோம்.

நான் தொடுகாடு ஊராட்சியில் 100 வீடுகள் கட்டிக் கொண்டு இருக்கிறோம். அந்த இடத்திற்கு நான் செல்ல இருக்கிறேன். அதே போன்று ஒவ்வொரு ஊராட்சிகளிலும் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் சென்று சமத்துவ பொங்கல் பண்டிகை கொண்டாட திட்டமிட்டுள்ளோம்.

கலைஞரின் கனவு இல்லம் 4000 வீடுகள் போனது வருடம் கொடுத்திருக்கோம். இந்த வருடம் 4200 வீடுகள். போன வருடம் கொடுத்த 4000 வீடுகளும் முடிவுற்று பொதுமக்களிடம் ஒப்படைத்து விட்டோம். இந்த வருடம் 4230 வீடுகளில் 1500 வீடுகள் முடிவுற்றது. மற்ற வீடுகளும் ஒரு மாத காலத்திற்குள் ஒப்படைக்கப்படும். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் பொதுமக்கள் அதிகமான வீடுகள் கேட்டுயிருக்கிறார்கள். அதற்கான ப்ரொபஷனல் தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்து அதற்கான ஆணையும் வர உள்ளது. அதற்கான பணிகளும் ஒரு மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படும்.

இரண்டு நெடுஞ்சாலைகளுக்கு இடையே கிராம சாலைகள் வரும். அந்த சாலையில் போக்குவரத்து அதிகமாக இருக்கும். நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைத்து 250 கிலோ மீட்டர் கிராம சாலைகளில் இருந்து நெடுஞ்சாலைக்கு ஒப்படைத்து அதில் 160 கிலோமீட்டர் நெடுஞ்சாலை விரைவில் தொடங்க இருக்கிறார்கள். இது அனைத்தும் முக்கியமாக நகர்ப்புறத்தை ஒட்டி இருக்கும் பஞ்சாயத்துகள் மோரை, வெள்ளானூர் சோழவரம் ஒன்றியத்தில் இருக்கும் வில்லிவாக்கம் ஒன்றியத்தில் இருக்கும் பூந்தமல்லி ஒன்றியத்தில் இருக்கின்ற சாலைகளில் நிறைய சாலைகள் நகரத்தை ஒட்டி இருப்பதால் பெரிய பெரிய லாரிகள் போகும். அதிகமான போக்குவரத்து இருப்பதால் அந்த சாலைகள் நெடுஞ்சாலை துறையில் ஒப்படைத்து உள்ளோம். அது மட்டும் இல்லாமல் கிராமங்களில் இருக்கும் சாலைகளில் 4 ஆண்டுகளில் 602 கிலோ மீட்டர் ரூ.332 கோடியில் சாலைகள் பணிகளை மேற்கொண்டுள்ளோம். முக்கியமான திட்டம் முதலமைச்சர் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் மூலம் ரூ.38 கோடி மதிப்பீட்டில் 51 கிலோமீட்டர் சாலைகளின் பணிகளும் 2 மாதத்திற்குள் முடிந்துவிடும். 124 கோடி மதிப்பீட்டில் 8 உயர்மட்ட மேம்பாலங்கள் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் முடித்து உள்ளோம். ரூ.60 கோடி மதிப்பீட்டில் 3 பெரிய மேம்பாலங்களை திருவள்ளூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கான பணிகளும் தற்போது நடைப்பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பாக நன்றிகள் தெரிவித்துக்கொள்கிறோம்.

773 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் தொடங்கப்பட்டு அதில் 718 பணிகள் முடிக்கப்பட்டு மற்ற பணிகளும் நடைப்பெற்று வருகிறது. கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து 35 புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் பணிகள் அந்த பணிகளும் தற்போது நடைப்பெற்று வருகிறது.

மகாத்மா காந்தி ஊரக வளர்ச்சி திட்டத்தில் நாற்றாங்கால் பண்ணைகள் ஊரக வளர்ச்சி துறை மற்றும் வனத்துறையின் மூலமாகவும் மரக்கன்றுகளை சாலையின் இருபுறங்களிலும் அமைத்து மாவட்டத்தை பசுமையாக மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இவ் ஆய்வில் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) தணிகாச்சலம், உதவி செயற்பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையினர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.

# மதர் பைரோஸ் டிரஸ்ட் சார்பாக மாநில அளவிலான கட்டுரை, கலை போட்டிக்கான பரிசளிப்பு விழா !



தூத்துக்குடி, ஜன.08-
மதர் பைரோஸ் டிரஸ்ட் சார்பாக உலக பிரெய்லி தினத்தை முன்னிட்டு மாநில அளவிலான கட்டுரை, கலை போட்டிக்கான பரிசளிப்பு விழா, நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரெய்லி கண்காட்சி சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதாஜீவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்ம நாயகம், முதன்மைக் கல்வி அலுவலர் ரா. சங்கீதா சின்னராணி, மாநில மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் மெய்கண்டன் முன்னிலை வகித்தனர். தமிழ்நாட்டில் பல மாவட்டகளில் இருந்து பார்வைற்றோர், மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் IBN AL HAYTHAM BRAILLE வாழ்நாள் சாதனை விருது முனைவர் வே. சுகுமாரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. டிரஸ்டி டாக்டர் முகம்மது நஸீர் பிஸியோ தெரபிஸ்ட் அவர்கள்

பிரெய்லி கண்காட்சி மற்றும் உலக பிரெய்லி தினத்ததை பற்றி சிறப்புரையாற்றினார். டிரஸ்டி ஆர்க்கிடெக்ட் முகம்மது ஹயாஸ் அவர்கள் பார்வைற்றவர்களின் தேவைகளை பற்றியும், அவர்களின் வாழ்வியலை பற்றியும் எடுத்துரைத்தார். தூத்துக்குடியில் பார்வைற்றவர்களுக்கு பள்ளிக்கூடம் இல்லை, வரும் கல்வியாண்டில் தூத்துக்குடியில் பார்வைற்றவர்களுக்கு பள்ளிக்கூடம் கொண்டு வர வேண்டும். என்ற கோரிக்கை டிரஸ்டின் சார்பாக அரசிற்கு வைக்கப்பட்டது, கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், இலவச வீடு, இவர்களுக்கு கிடைக்க கோரிக்கை வைக்கப்பட்டது. மதுரை புனித ஜோசப் பார்வையற்றோர் பள்ளிக்கு சிறந்த பள்ளி விருது கிடைத்தது. முதல் பரிசு கோயமுத்தூர் ராமகிருஷ்ண மிஷனல் மாணவி பரணி ஸ்ரீயும் ,2ம் பரிசு மதுரை புனித ஜோசப் பள்ளி மாணவன் சிவக்குமாரும், மூன்றாம் பரிசு திருச்சி அரசு பார்வையற்றவர் பள்ளி மாணவி வனிதாவும் நான்காம் பரிசு சேலம் அரசு பார்வையற்றவர் பள்ளி மாணவர் அபினேஷ் குமாரும் வாங்கினர். சிறப்பு ஆசிரியர் ரிகானா பர்வின் நன்றி உரையாற்றினார்.



மதுரையில் 37 வது சாலை பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு சிம்மக்கல் பகுதியில் திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ.தங்கமணி ஏற்பாட்டில் வாகன ஓட்டிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் உடன் உள்ளனர்.

# நாகர்கோவில் மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் ஷோரூமில் ராம்ப்வாக் நிகழ்ச்சியுடன் பிரத்யேக இந்திய பிரைடல் நகை விற்பனை தொடக்கம்!



நாகர்கோவில், ஜன.8-

நாகர்கோவிலில் உள்ள மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் ஷோரூமில் பிரத்யேக பிரைடல் நகை கண்காட்சி மற்றும் விற்பனை தொடக்க விழா நேற்று நடைபெற்றது. பிரைட்ஸ் ஆப் இந்தியா ராம்ப்வாக் நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. 5 பெண்கள் (மாடல்ஸ்) மலபார் கோல்ட் அண்ட் டைமண்ட்சின் வித விதமான திருமண நகைகளை அணிந்து ராம்ப்வாக் வந்தனர். பின்னர் அந்த நகைகளின் சிறப்புகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. விழாவில் நாகர்கோவில் கிளை தலைவர் ரினித், வர்த்தக மேலாளர் துவாரகாநாத் ஆகியோர் பங்கேற்றனர்.

இதுபற்றி அவர்கள் கூறியதாவது: மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் ஷோரூமில் பிரத்யேக பிரைடல் நகை கண்காட்சி மற்றும் விற்பனை தொடக்க விழாவை முன்னிட்டு சிறப்பு சலுகைகளாக தங்கம், வைரம், ஜெம்ஸ்டோன் மற்றும் அன்கட் நகைகளுக்கு சேதாரத்தில் 30 சதவீதம் வரை தள்ளுபடி மற்றும் வைரத்தின் மதிப்பில் 30 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. இந்த சலுகை வருகிற 18-ந்தேதி வரை நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் ஷோரூமில் வழங்கப்படுகிறது.

மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான 'மைன்', பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட 'எரா', மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான 'எத்தினிக்', நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிவைப்புகளில் உருவான 'டிவைன்' ஆகியவை இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் தற்போது 14 நாடுகளில் 426 சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகின் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. அனைத்து நகைகளும் வெளிப்படையான விலை, நிகர எடை, கற்களின் எடை, சேதாரம், கற்களுக்கான விலை, அதன் நிகர எடை ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடும் பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளன. இதனால் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு நகையின் தயாரிப்பு குறித்தும், அதன் விலையையும் எளிதாக புரிந்து கொண்டு வாங்குவதற்கு திட்டமிடலாம்.

வாடிக்கையாளர்கள் வாங்கும் அனைத்து நகைகளுக்கும் ஆயுள் முழுவதும் இலவச பராமரிப்பு, அனைத்து நகைகளையும் எப்போது வேண்டுமானாலும் மாற்றி பெற்றுக்கொள்ளும் உத்தரவாதம் போன்ற வாக்குறுதிகளை வழங்குகிறது. இவை தவிர மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூக பொறுப்பும் முக்கிய காரணமாக உள்ளது. தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என பல்வேறு சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# வில்லுக்குறி பேரூராட்சி செயல் அலுவலர் இடமாற்றத்தை ரத்து செய்யக்கோரி பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள் விடிய விடிய உள்ளிருப்பு போராட்டம்



திங்கள்சந்தை, ஜன.8-

வில்லுக்குறி பேரூராட்சி செயல் அலுவலர் இடமாற்றம் செய்ததை ரத்து செய்து, மீண்டும் அவரை அதே இடத்தில் பணி அமர்த்த வேண்டும் என பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள் விடிய விடிய நடத்தி வரும் உள்ளிருப்பு போராட்டம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வில்லுக்குறி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றியவர் பிரதாபன். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இதற்கு வில்லுக்குறி பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் அவரை மீண்டும் வில்லுக்குறி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பேரூராட்சி தலைவி விஜய லெட்சுமி தலைமையில் நேற்று காலை முதல் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தில் துணைத் தலைவர் ராமலிங்கம் முன்னிலையில், கவுன்சிலர்கள் சரிதா, சுதா, தேவிகா, புஷ்பாகரன், வினோத், எட்வர்ட் திலக், சுகிதா, ஆன்சிலா விஜிலியஸ், ரீனா, சுப்பிரமணியபிள்ளை, ஸ்டான்லி, கிரிஜாம்பிகா, நியமன உறுப்பினர் ஜோசப் பிராங்கிளின் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து வில்லுக்குறி பேரூராட்சி தலைவர் விஜயலெட்சுமி கூறியதாவது;

வில்லுக்குறி பேரூராட்சியில் நேர்மையாகவும் திறமையாகவும் செயல்பட்டு வந்தவர் செயல் அலுவலர் பிரதாபன். அப்போது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின்படி சரல்விளையில் உள்ள 4 ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற பேரூராட்சி நிர்வாகத்திற்கு மாவட்ட கலெக்டர், பத்மநாபபுரம் கோட்டாட்சியர் ஆகியோரிடம் இருந்து கடிதம் வந்தது. அதன்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற பேரூராட்சி நிர்வாகம் சார்பில் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், கல்குளம் வட்டாட்சியர், இரணியல் போலீஸ் இன்ஸ்பெக்டர், மின்வாரிய அலுவலர், ஆர்ஐ, கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு உரிய கடிதம் அனுப்பி 4 ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகள் இரணியல் இன்ஸ்பெக்டர் மற்றும் காவல் துறையினர் பாதுகாப்புடன், மின்வாரிய அலுவலர்கள், பேரூராட்சி பணியாளர்கள் முன்னிலையில் நடந்தது.

ஆக்கிரமிப்பு அகற்றியபோது கல்குளம் தாசில்தார், ஆர்ஐ, கிராம நிர்வாக அதிகாரி ஆகிய வருவாய்த்துறை அதிகாரிகள் வரவில்லை. அவர்கள் ஏன் வரவில்லை என்பது குறித்து தெரியாது. அதற்கு அவர்கள் தான் விளக்கம் அளிக்க வேண்டும். இந்த நிலையில் தவறு ஏதும் செய்யாத வில்லுக்குறி பேரூராட்சி செயல் அலுவலர் பிரதாபன் பணியிட மாற்றம் செய்யப்பட்டு உள்ளார். அவர் பொறுப்பேற்ற பிறகுதான் வில்லுக்குறி பேரூராட்சி 15 வார்டுகளிலும் வளர்ச்சி பணிகள் வேகமாக நடந்து வருகிறது. எனவே நிர்வாக நலன் கருதி தலைவர், துணைத் தலைவர், வார்டு உறுப்பினர்கள் ஆகிய எங்கள் அனைவரின் நலன் கருதி மீண்டும் செயல் அலுவலர் பிரதாபனை வில்லுக்குறி பேரூராட்சியில் பணியமர்த்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தகவல் அறிந்து வந்த பிரின்ஸ் எம்எல்ஏ போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். செயல் அலுவலர் பிரதாபனை மீண்டும் நியமனம் செய்யும் வரை போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். அதிகாரிகள் தரப்பில் யாரும் வராததால் இரவும் போராட்டம் தொடர்ந்தது. கவுன்சிலர்களின் உறவினர்கள் பொதுமக்களின் என ஏராளமானோர் அங்கு குவிந்தனர். கவுன்சிலர்கள் அனைவரும் இரவு பாயை விரித்து அங்கேயே படுத்து தூங்கி விட்டனர். விடிய விடிய நடந்த இந்த போராட்டம் இன்று காலையிலும் தொடர்ந்து நடந்து வருகிறது.

போராட்டம் குறித்து கவுன்சிலர்கள் கூறியதாவது: உயர் அதிகாரிகள் உத்தரவுப்படி நேர்மையாக நடந்து கொண்ட செயல் அலுவலரை பழி வாங்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவரை மீண்டும் இங்கு செயல் அலுவலராக பணியமர்த்த வேண்டும். அதுவரை எங்கள் போராட்டம் தொடரும். இந்தப் போராட்டத்தில் கட்சி பாகுபாடின்றி பாஜக, திமுக, காங்கிரஸ், அதிமுக மற்றும் நியமன உறுப்பினர் என 15 கவுன்சிலர்கள் கலந்து கொண்டு உள்ளோம். ஒரு பெண் கவுன்சிலர் உடல் நலம் சரியில்லாமல் சிகிச்சை பெற்று வருவதால் அவரால் கலந்து கொள்ள இயலவில்லை.

ஆனால் அங்கிருந்தே அவரும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உள்ளார். பொறுப்பு செயல் அலுவலரை தவிர எந்த அதிகாரிகளும் இதுவரை எங்களிடம் பேச்சு வார்த்தை நடத்த வரவில்லை. உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி எங்கள் கோரிக்கைகளை நிறை வேற்றி தர வேண்டும். அதுவரை எங்கள் போராட்டம் அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் ஆதரவுடன் தொடரும் என்றனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.








விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சி தமிழர் திருமாவளவனிடம் புத்தாண்டு வாழ்த்து பெறுவதற்கு வழக்கறிஞர் ஏ.புருசோத்தமன் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இதில் மாவட்ட செயலாளர் மந்தவெளி அசோக், மண்டல துணை செயலாளர் மயிலை கி. குமரப்பா, இளஞ் சிறுத்தை எழுச்சி பாசறையின் மாவட்ட அமைப்பாளர் சமூக வேந்தன், சா. முருகன், மயிலை தொகுதி துணை செயலாளர் திலீபன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வக்கீல்கள் தொடர் போராட்டம் எதிரொலி இ ஃபைலிங் முறை நிறுத்தி வைப்பு நாளை முதல் பணிக்கு திரும்புகின்றனர்

நாகர்கோவில், ஜன.8-

சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 10. 12. 2025 அன்று இ ஃபைலிங் முறையை கட்டாயமாக்கி அறிவித்தது. இந்த இந்த முறையில் ஒரே நேரத்தில் அதிகமாக மனு தாக்கல் செய்யும்போது சர்வர் பிரச்சினை ஏற்படும். குறிப்பாக வழக்காடிகள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலையில் பெட்டிஷன் போடுவதில் கால தாமதமாகி அவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே தகுந்த ஏற்பாடுகள் செய்யும் வரை இதனை நிறுத்தி வைக்க வேண்டும் என்று தமிழ்நாடு, பாண்டிச்சேரி வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தை அறிவித்து நடத்தியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜாக் அமைப்பு நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை செய்தனர். இதில் சுமூக முடிவு ஏற்பட்டது. இது குறித்து நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கத் தலைவர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவரான அசோக் பத்மராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:-

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜாக் அமைப்புடன் நடத்திய ஆலோசனையின் முடிவில் 10. 12. 2025 தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பினை நிறுத்தி வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நாளை 9ஆம் தேதி முதல் வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணியை தொடரலாம். கடந்த ஒரு மாதம் நடந்த போராட்டத்தில் நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க கூட்டமைப்பை சேர்ந்த வழக்கறிஞர்கள் கலந்து கொண்டது இந்த வெற்றிக்கு காரணம். எனவே நாகர்கோவில் வழக்கறிஞர் சங்கம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட வழக்கறிஞர் சங்க கூட்டமைப்பு சார்பில் சங்கத்தின் அனைத்து வழக்கறிஞர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# கொல்லங்கோடு அருகே கடை உரிமையாளர் தூக்கிட்டு தற்கொலை



மார்த்தாண்டம், ஜன.8-

கொல்லங்கோடு அருகே இளம் பாலமுக்கு பகுதியை சேர்ந்தவர் நளினாக்ஷன் (41) கட்டுமான பொருட்கள் வாடகைக்கு விடும் கடை நடத்தி வந்தார். இவரது மனைவி கிருஷ்ணபிரியா . அடிக்கடி குடும்ப பிரச்சனை ஏற்படுவது வழக்கம். இந்த நிலையில் கிருஷ்ணபிரியா நேற்று முன்தினம் கொல்லங்கோடு போலீசில் புகார் அளித்துள்ளார். போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து மீண்டும் இரவு கணவன் மனைவிக்கு பிரச்சனை ஏற்பட்டுள்ள நிலையில் இரவு 10 மணியளவில் கையை பிளேடாவில் அறுத்து, அறையில் ஃபேன் கொக்கியில் நளினாக்ஷன் தூக்கிட்டு தற்கொலை செய்தார். கொல்லங்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்

# புதுக்கடை அருகே வாய்க்காலில் குளித்துக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் கிடந்த தங்க செயின் பறிப்பு

புதுக்கடை, ஜன.8-

புதுக்கடை அருகே விழுந்தயம் பலம், குஞ்சாக்கோடு பகுதியை சேர்ந்தவர் தங்கப்பன் மனைவி ஞான செல்வம் (60). இவர் நேற்று மாலை 5 மணி அளவில் அந்தப் பகுதியில் உள்ள நாகர் குளம் அருகில் வாய்க்காலில் குளித்து கொண்டு இருந்தார். அப்போது பதிவு எண் தெரியாத இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் வந்து குளித்துக் கொண்டிருந்த ஞான செல்வத்தின் கழுத்தில் கிடந்த ஐந்தரைப்பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டு தப்பி சென்று விட்டனர். உடனடியாக ஞான செல்வம் சத்தம் போட்டார். அக்கம் பக்கத்தினர் அந்த பகுதியில் வந்து பல்வேறு இடங்களில் தேடியும் திருடியவர்கள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதையடுத்து ஞான செல்வம் புதுக்கடை போலீசில் புகார் செய்தார். புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# குமரியில் 5 . 80 லட்சம் குடும்பங்களுக்கு இன்று முதல் பொங்கல் பரிசு விநியாகம் : கலெக்டர் அறிவிப்பு!



நாகர்கோவில், ஜன.8-

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அழகு மீனா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

குமரி மாவட்டத்தில் மொத்தம் 5 லட்சத்து 79 ஆயிரத்து 667 குடும்ப அட்டைகளுக்கும், 406 இலங்கை தமிழர் மறுவாழ்வு நியாய விலை கடைகள் மூலமாக ரொக்க பணத்துடன் கூடிய பொங்கல் பரிசு தொகை இன்று முதல் வழங்கப்பட உள்ளது. தகுதி வாய்ந்த இந்த குடும்ப அட்டைகளுக்கு விடுதல் இன்றி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது பொங்கல் பரிசு பெறுவதற்கான டோக்கன் நியாய விலை கடை பணியாளர்கள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடுகளுக்கு சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள டோக்கன்களில் குறிப்பிட்ட தேதியன்று கடைகளுக்கு சென்று பரிசுத்தொகுப்பு, ரொக்க தொகையை பெற்றுக் கொள்ளலாம். நியாய விலை கடைகளில் ஆண்கள் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்தனி வரிசை முறையை பின்பற்றி எந்த இடையூறும் இல்லாமல் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த பரிசு பொருட்கள் நான்கு நாட்கள் முதல் அதிகபட்சமாக 6 நாட்களில் அனைத்து நியாய விலை கடைகளிலும் வழங்கப்படும். இது தொடர்பாக புகார் ஏதாவது இருப்பின் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கும் விதமாக கலெக்டர் அலுவலக கட்டுப்பாட்டு அறை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். மேலும் வட்ட அளவில் பறக்கும் படை அமைக்கப்பட்டு புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. என கலெக்டர் செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

# களியக்காவிளை அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




களியக்காவிளை, ஜன.8-

வெனிசுலா அதிபரை கைது செய்த அமெரிக்காவைக் கண்டித்து களியக்காவிளை அருகே கோழிவிளை சந்திப்பில் மெதுகும்மல் வட்டார மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இப் போராட்டத்துக்கு வட்டாரக் குழு உறுப்பினர் ராஜு தலைமை வகித்தார். மாவட்ட குழு உறுப்பினர் சிதம்பர கிருஷ்ணன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். வட்டாரக் குழு உறுப்பினர்கள் விஜயா, லாரன்ஸ் ஆகியோர் போராட்டத்தை விளக்கிப் பேசினர். மெதுகும்மல் வட்டார செயலாளர் தங்கமணி போராட்டத்தை நிறைவு செய்து பேசினார்.

இதில் கட்சியின் வட்டாரக் குழு உறுப்பினர்கள் சுரேஷ்குமார், வினிதா, ரீனா, ரிஷிகுமார், ஜெயன், பெஞ்சமின், ரகீம், சுதேவ். ஸ்ரீனிவாசன், ஆல்பர்ட் கோபகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கைது செய்யப்பட்ட வெனிசுலா அதிபர் மற்றும் அவரது மனைவியை விடுதலை செய்ய வேண்டும், அமெரிக்க படைகள் வெனிசுலா நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது.

# காரமடை,ஆர்.வி. கலை அறிவியல் கல்லூரியில் தேசிய இளைஞர் தின விழா



**கோவை, ஜன.08–**

**காரமடை,டாக்டர். ஆர்.வி. கலை அறிவியல் கல்லூரியில் கோவை, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரியின் சார்பில் வருகின்ற ஜனவரி–12 சுவாமி விவேகானந்தரின் 163 –ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் தினவிழா டாக்டர்.ஆர்.வி. கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவின் தொடக்க நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர்.சி.என் ரூபா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பெரியநாயக்கன்பாளையம், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் மூத்த துறவி சுவாமி தத்பாஷானந்தர் ஆசியுரை வழங்கினார்.**

**சுவாமி ஹரிநாதானந்தர் தலைமையேற்று சிறப்புரையாற்றினார்.**

**அவர் பேசுகையில் ,"நம் ஒவ்வொருவருக்குள்ளும் அளப்பரிய ஆற்றல் உள்ளது. அதனை உணர்ந்தால் வலிமை உடையவர்கள் ஆகலாம்.நம் தேசம் புனிதமான தேசம் நம் தாய்க்கு நிகராக நம் தேசத்தை போற்ற வேண்டும்.எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில் உள்ளது.சுயநலமற்ற சேவையால் கடவுள் சக்தியை உணரலாம் "என்று மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.நிகழ்வின் நிறைவாக, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கல்லூரியின் செயலர் முனைவர். கந்தப்பன் அவர்கள் நன்றியுரை கூறினார்.இதனைத் தொடர்ந்து தேசிய இளைஞர் தின விழா பேரணி நடைபெற்றது .இப்பேரணியை காரமடை,காவல் உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

**இப்பேரணியில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டாக்டர். ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரி,யுனைடெட் கல்வி நிறுவனங்கள்,கங்கா நர்சிங் கல்லூரி,ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக் கல்லூரி,கிறிஸ்து அரசர் பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிளில் இருந்து 800 மாணவ, கலந்து கொண்டனர். மாணவிகள் இந்நிகழ்வில் ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலய கல்லூரியில் இருந்து சுவாமி சூர்யாத்மானந்தர்,முதல்வர் முத்துசாமி,இயக்குநர் ஸ்ரீதர்,காரமடை ரோட்டரி கிளப் தலைவர் குமணன்,காரமடை, சௌமியா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் சதீஷ்,ஆர்.வி. கல்லூரியின் நிர்வாக மேலாளர் மனோகரன் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

**இந்நிகழ்வு இன்றைய இளைஞர்கள் மத்தியில் பெரும் உத்வேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.**



ஈரோட்டில் நடந்த பாரதிய ஜனதா கட்சியின் விவசாய விழிப்புணர்வு மாநாட்டில் கலந்து கொண்ட மத்திய வேளாண்மை துறை மந்திரி சிவராஜ் சிங் சவுகானை தேசிய பிற மொழி பிரிவின் ஈரோடு மாவட்ட தலைவர் வி. அங்கிட் ஜெயின் வரவேற்றார். இதில் விவசாய அணி மாநில தலைவர் நாகராஜ் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் எஸ் எம் செந்தில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கடை அருகே பெற்றோரின் சொத்தை போலி கையெழுத்திட்டு பைனான்சில் லோன் வாங்கிய மகன் உட்பட 5 பேர் மீது வழக்கு!

புதுக்கடை, ஜன.8-

புதுக்கடை அருகே பார்த்திபபுரம் பகுதியை சேர்ந்தவர் ஞானமணி மனைவி பிரேமா (59). இவரது மகன் அபிலாஷ் (33). இவர் புதுக்கடை பேரூராட்சியில் சந்தை காவலராக பணியாற்றி வருகிறார். தற்போது பாகோடு பகுதியில் மனைவி குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். இந்த நிலையில் பிரேமா கணவர் பெயரில் வீட்டுடன் சேர்ந்த ஏழரை சென்ட் நிலம் உள்ளது. அபிலாஷ் அந்த நில பத்திரத்தை தந்தையின் பெயரில் இருந்து தனது பெயரில் போலி ஆவணம் தயாரித்து ஒரு தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் லோன் கடன் வாங்கி உள்ளார். இது குறித்து அவரது பெற்றோருக்கு தெரிய வந்தது. இந்த சம்பவம் தொடர்பாக பிரேமா குழித்துறை கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். குழித்துறை கோர்ட் உத்தரவின் படி புதுக்கடை போலீசார் சொத்து மோசடி செய்த அபிலாஷ், மனைவி இந்துஜா (28), பைனான்ஸ் கிளை மேலாளர் தங்க ரூபன், மல்லிகா மற்றும் செல்வராஜ் ஆகிய ஐந்து பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.